28th September 1955]

முதலாளிகளிடம் நடவடிக்கை எடுத்து, பணம் வசூலித்து, எத்தனை தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரங்களை மந்திரியவர்கள் கூறமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர் சொல்லியது எல்லாம் சரியல்ல என்று சொல்லவில்லை. அவருடைய 'ப்ரிஸம்ஷன்' தான் சரியல்ல என்று சொன்னேன். இப்போது கனம் எதிர் கட்சி உபதலைவர் கேட்கின்ற கேள்விக்கு தனிக் கேள்வியாகக் கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI T. S. ARDHANARI : சபாநாயகர் அவர்களே, 1952-ம் வருஷம் ஒரு தொழிலாளிக்கு 'கரண்ட் கட்' காரணமாக நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்றால், அந்த வருஷம் பூராவுக்குமே அவருக்குள்ள சர்வீஸ் ஒரு வருஷ காலமாக இருந்தால் கொடுக்க வேண்டுமென்று தொழிலாளிகள் சொல்லுகிறார்கள். முதலாளிகள் அதற்கு முந்திய வருஷத்தில், அதாவது 1951-ம் வருஷத்தில் ஒரு வருஷ சர்வீஸாக இருந்தால் தான் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்தமாதிரியான தகராறைத் தீர்த்துவைப்பதற்கு மத்தியஸ்த கோர்ட்டை சர்க்கார் நியமிப்பதற்கு முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ட்ரிப்யூனல் தீர்ப்பு நடந்தது. அதற்குமேலே சில மானேஜ்மெண்டார்கள் அப்பீல்கள் செய்திருக்கிறார்கள். அந்த அப்பீல்கள் சர்க்காருக்கு வந்துள்ளன. அந்த அப்பீல்களைப் பார்த்து முடிந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Grants to Ayurvedic hospitals and institutions

* 2513 *Q.*—SRI T. C. NARAYANAN NAMBIAR (on behalf of Sri V. R. Krishna Ayyar) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have sanctioned any grants to (1) Ayurvedic hospitals, (2) Ayurvedic teaching institutions in (*a*) Malabar and (*b*) Tamil districts in 1955;

(*b*) whether the Government have received any resolutions from the recent State Ayurvedic Conference to change the present system of Ayurvedic tuition in the College of Indigenous Medicine, Madras; and

(*c*) the qualification in Ayurveda of the present Principal of the above College?

THE HON. SRI A. B. SHETTY : (*a*) Yes, Sir, to the Madhava Memorial Ayurveda Vidyalayam and Hospital, Cannanore, and the Venkataramana Ayurvedic College and Dispensary, Madras.

(*b*) Yes, Sir.

(*c*) The post of Principal of the College has been held in abeyance since 1st July 1953 and the posts of a Dean and a Vice-Principal have been created instead. The Dean does not possess any qualification in Ayurveda. The Vice-Principal's qualifications are Ayurveda Acharya of the All-India Ayurveda Mahamandali and H.P.I.M.